இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 58 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 21 – வியாழக்கிழமை 08 அக்டோபர் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 58 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 21 - Thursday 08 October 2026 - Madurai 8 Pages ₹ 5.00

நாற்காலியைக் காப்பாற்றுவதில் கவனம் செலுத்தாமல் Take Action CM Sir !

சட்டம் - ஒழுங்கு சீரழிவு! ரத்தச் சகதியில் தமிழ்நாடு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் விமர்சனம்!

சென்னை, அக். 8 -

“தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு சீரழிந்து ரத்தச் சகதியில் சிக்கியுள்ளது. சாக்கு போக்குச் சொல்லித் தப்பிக்கும் காலம் கடந்துவிட்டது Take Action CM Sir” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித் துள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

த.வெ.க. ஆட்சியில் மின்வெட்டை மிஞ்சும் அளவுக்குத் தலைதூக்கும் அரிவாள் வெட்டு.

சட்டம் - ஒழுங்கு சீரழிந்து ரத்தச் சகதியில் சிக்கியுள்ள தமிழ்நாடு.

குற்றவாளிகள் தைரியமாகவும், பொதுமக்கள் அச்சத்தோடும் வாழும் சூழலுக்குத் தமிழ்நாடு தள்ளப்பட்டுள்ளதற்குச் சான்றாக கடந்த 24 மணி நேரத்தில் வெளியாகிய அதிர்ச்சிச் செய்திகள் அமைந்துள்ளன.

- சென்னை மயிலாப்பூரில் 19 வயது இளைஞர் சத்தியசீலன் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.



- ஜனாபாய் எனும் மூதாட்டி பகலிலேயே கழுத்து நெரித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார். கொலையாளிகள் அவரது நகைகளைத் திருடிச் சென்றுள்ளனர்.
- திண்டுக்கல் மாவட்டம் சாணார்பட்டி காவல் நிலையத்தில் ஜாமீன் கையெழுத்து போட்டுவிட்டுத் திரும்பும்போதே வீரபத்திரன் என்பவர் மர்ம நபர்களால் மனைவி முன்பு வைத்துச் சரமாரியாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

த.வெ.க. ஆட்சியில் மின்வெட்டை மிஞ்சும் அளவுக்குத் தலைதூக்கும் அரிவாள் வெட்டு!

- திருத்தணியில் தனது 17 வயது மகளுக்குத் தொல்லை கொடுத்த நபர் மீது காவல்நிலையத்தில் புகாரளித்த தந்தை அவரது வீட்டின் முன்பே வைத்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். காவல் நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காமல் அலட்சியமாக இருந்ததால் இந்தக் கொலை நிகழ்ந்திருக்கிறது.
- சேலத்தில் வீட்டில் தனியாக இருந்த மாணவர்களை வெட்ட முயற்சி நடந்துள்ளது.

வீட்டிலும் பாதுகாப்பில்லை – வெளியிலும் பாதுகாப்பில்லை!

வடக்கு, தெற்கு, மேற்கு, தலைநகர் என எல்லா திசைகளிலும் குற்றச் சம்பவங்கள் கொடிகட்டிப் பறக்கின்றன. பட்டப் பகல், நள்ளிரவு எனப் பாகுபாடு இல்லாமல் தமிழ்நாடு இரத்தத்தில் தோய்ந்து போயுள்ளது. வீட்டிலும் பாதுகாப்பில்லை, வெளியிலும் பாதுகாப்பில்லை என்ற நிலையில் மக்கள் பரிதவித்துக் கிடக்கின்றனர்.

- காவல்துறையினரால் ரோந்துப் பணி மேற்கொள்ளப்படுகிறதா இல்லையா?
- சிங்கப்பெண் அதிரடிப்படையினர் ரீல்ஸ் போடுவதில் காட்டும் ஆர்வத்தைப் பெண்களின் பாதுகாப்பில் காட்டுவார்களா மாட்டார்களா?
- காவல் நிலையத்தில் புகாரளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாமல் புகார் தெரிவித்தவர்களே கொலைக்கு உள்ளாகும் அராஜகத்துக்கு முடிவு எப்போது?
- குற்றவாளிகள் கண்காணிக்கப்படுகிறார்களா இல்லையா? கண்காணிப்பு இல்லாமல் போனதைத்தானே திண்டுக்கல் மாவட்டக் கொலைச் சம்பவம் காட்டுகிறது?

நாற்காலியை காப்பாற்றுவதில் கவனம் செலுத்தும் முதலமைச்சர்!

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு நாளாக, நாளாக மிக மிக ஆபத்தான கட்டத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. மக்களின் உயிரைக் காப்பதில் கவனம் செலுத்த வேண்டிய முதலமைச்சரின் கவனம் மொத்தமும் தனது நாற்காலியைக் காப்பாற்றுவதிலேயே இருக்கிறது.



காவல்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் அவர்கள் நிலைமையின் வீரியத்தை உணர வேண்டும். சாக்கு போக்கு சொல்லித் தப்பிக்கும் காலம் எல்லாம் கடந்து விட்டது. ‘Take Action’ ShootingMode இல் இருந்து விடுபட்டு, Please Take Action CM Sir!?

அதற்கான விலையாக அப்பாவி மனித உயிர்கள் பலி கொடுக்கப்பட்டு வருகின்றன.

காவல்துறைக்குப் பொறுப்பு வகிக்கும் முதலமைச்சர் அவர்கள் நிலைமையின் வீரியத்தை உணர வேண்டும். சாக்கு போக்கு சொல்லித் தப்பிக்கும் காலம் எல்லாம் கடந்துவிட்டது. ‘Take Action’ Shooting Modeஇல் இருந்து விடுபட்டு, Please Take Action CM Sir!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு:

கொடைக்கானலில் அரசு நிலத்தை அபகரித்த முதலமைச்சர் விஜய்!

சென்னை, அக்.8 -

கொடைக்கானலில் அரசு நிலத்தை முதலமைச்சர் விஜய் அபகரித்துள்ளதாக சென்னை உயர்நீதிமன்றத்தில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விஜய் தாக்கல் செய்துள்ள வேட்புமனு மற்றும் சொத்து விவர படிவத்தில் முரண்பாடுகள் இருப்பதாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சென்னை பாடியில் 35 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு சொத்தை, இன்னும் தமக்குச் சொந்தமான 7 கோடி மதிப்புள்ள சொத்து என தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் விஜய் தவறாகக் குறிப்பிட்டுள்ளார்.

கொடைக்கானல் வில்பட்டி கிராமத்தில் 50 சென்ட் விவசாய நிலங்கள் இருப்பதாக, தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் விஜய் குறிப்பிட்ட நிலம், அரசுக்கு சொந்தமானது என மனுவில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

முதலமைச்சர் விஜய் தேர்தல் பிரமாணப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல அசையாச் சொத்துக்கள் குறித்துத் தகவல்கள் வேண்டுமென்றே மறைக்கப்பட்டுள்ளதாகவும், தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், இதனால் சென்னை பெரம்பூர் தொகுதியில் முதலமைச்சர் விஜய் பெற்ற வெற்றியை செல்லாது என அறிவிக்க மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த வழக்கின் விசாரணை சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

தமிழக முதல்வர் சி.ஜோசப் விஜய் 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் சென்னை பெரம்பூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியை செல்லாது என அறிவிக்கக் கோரி, அதே தொகுதியைச் சேர்ந்த எஸ்.தினேஷ் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தொடர்ந்துள்ளார்.

தேர்தல் வேட்புமனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட பிரமாணப் பத்திரத்தில் (Form 26), முதல்வர் விஜய் தனது அசையா சொத்துக்கள் குறித்த விவரங்களை முழுமையாகவும் சரியாகவும் தெரிவிக்கவில்லை. தகவல்களை மறைத்துள்ளார் என்பதே மனுதாரரின் பிரதான குற்றச்சாட்டு ஆகும்.

சென்னை போரூரில் ரூ.9.13 கோடிக்கு 33,955 சதுர அடி விவசாயம் அல்லாத நிலத்தை 2010ல் வாங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் பதிவுத்துறை ஆவணங்களின் படி, அவர் ரூ.7.5 கோடிக்கு 20,773 சதுர அடி நிலத்தை மட்டுமே வாங்கியுள்ளார். நிலத்தின் பரப்பளவு மற்றும் விலையில் ஏன் இந்த கூடுதல் தகவல் குறிப்பிடப்பட்டது என்பதற்கு விளக்கம் இல்லை என்று குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால், அந்த 23,460 சதுர அடி வணிகக் கட்டடத்தை வேட்புமனு தாக்கல் செய்வதற்கு முன்பே, 2026 பிப்ரவரி 12 அன்றே ரூ.35 கோடிக்கு விற்றுவிட்டதாக மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும், இக்கட்டடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் இருந்து கொரட்டூர் நிலத்திற்குப் பதிலாக பரிமாற்றப் பத்திரம் மூலம் பெறப்பட்டது. இது நேரடி கொள்முதல் அல்ல என்ற விவரமும் மறைக்கப்பட்டதாகக் கூறப்பட்டது.

நீலாங்கரை பங்களாவை பரம்பரைச் சொத்து எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அது பரம்பரைச் சொத்து அல்ல; அவரது தந்தை எஸ்.ஏ. சந்திரசேகர் 2003ல் வேறொருவரிடம் இருந்து வாங்கி, 2005ல் தனது மகனுக்கு அன்பளிப்பாக (Settlement Deed) எழுதிக் கொடுத்த சொத்து. இதில் கட்டடப் பரப்பளவு மற்றும் சந்தை மதிப்பில் முரண்பாடுகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் அவதி!

தமிழ்நாட்டில் அரிசி - மளிகைப் பொருட்கள் விலை கடும் உயர்வு!

த.வெ.க. ஆட்சி நடவடிக்கை எடுக்காமல் மௌனம்!

சென்னை, அக்.8 -

தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்ந்து வருகிறது. அரிசி, பருப்பு, சமையல் எண்ணெய் உள்ளிட்ட மளிகைப் பொருட்களின் விலை கிடு கிடுவென உயர்ந்து வருவதால் பொதுமக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழ்நாட்டில் த.வெ.க. ஆட்சி அமைந்தது முதல் அரிசி விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அரிசி விலை கடந்த 4 மாதங்களில் 4வது முறையாக உயர்ந்துள்ளது, அரிசி மூட்டை ஒன்றுக்கு 300 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

உதாரணமாக ஆயிரத்து 400 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட டீலக்ஸ் பொன்னி அரிசி தற்போது ஆயிரத்து 800 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆயிரத்து 600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பொன்னி அரிசி, தற்போது ஆயிரத்து 950 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆயிரத்து 900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட வெள்ளை பொன்னி அரிசி தற்போது 2 ஆயிரத்து 300 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட இட்லி அரிசி தற்போது ஆயிரத்து 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆயிரத்து 500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பச்சரிசி தற்போது ஆயிரத்து 800 ரூபாய்க்கும், 25 கிலோ எடை கொண்ட சிவாஜி பொன்னி அரிசி ஆயிரத்து 800 ரூபாயில் இருந்து 2 ஆயிரத்து 400 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

அரிசி ஆலைகளில் நெல் கையிருப்பு குறைந்துள்ளதால், அரிசி விலை மேலும் உயர வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. தீப ஒளி பண்டிகைக்கு முன் ஒரு கிலோ அரிசி நூறு ரூபாயை தாண்டும் என்பதால் பொதுமக்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதேபோல், மளிகைப் பொருட்களின் விலையும் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. சமையல் எண்ணெய் விலை லிட்டருக்கு 20 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.

பருப்பு வகைகளின் விலை கிலோவுக்கு 10 ரூபாயும், சீரகம் விலை கிலோவுக்கு 50 ரூபாயும் அதிகரித்துள்ளது.

மளிகைப் பொருட்களின் விலை தொடர்ந்து அதிகரித்து வருவது பொதுமக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

அரிசி, மளிகைப் பொருட்கள் மட்டுமின்றி காய்கறி விலையும் அதிகரித்து வருகிறது. விலை வாசி உயர்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காமல் தவெக அரசு தூங்கிக் கொண்டிருக்கிறதா என மக்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.